















# மாக்சி டிரஸ்

***இந்த டுடோரியலில் ஒரு மாக்சி டிரஸ் எவ்வாறு தைப்பது என்று கற்றுக்கொள்வோம்***

**தேவையான பொருட்கள்**


மேக்ஸி டிரஸ் செய்ய உங்களுக்கு தேவைப்படறவை
45 "அகலமுள்ள 4 மீட்டர் துணி
எங்கள் வலைத்தளமான www.ushasew.comலிருந்து நீங்க பதிவிறக்கம் செய்யக்கூடிய மேக்ஸி டிரஸ் டெம்ப்ளேட்
சாக்
கத்தரிக்கோல்
பொருந்தும் நூல்
பின்கள்
மற்றும் உஷா ஜானோம் கேதரிங் ஃபூட்


நாம இதுல முன்பக்க, பின்பக்க, யோக், அப்புறம் ஸ்லீவ் போன்ற பல்வேறு துண்டுகளை எப்படி கட் பண்றது, டிரஸ்சோட முன் பக்கத்தில யோக்-ஐ எப்படி இணைக்கறது, பின்பக்க துண்டை முன்பக்கத்தில வெச்சு தைக்கறது, நெக்லைன் ரெடி பண்றது, ஸ்லீவ்ல அதை சேர்க்கறது அப்புறம் கடைசியா பக்க சீமை தைக்கறது, ஸ்லீவயும் அடிப்பக்கத்தையும் ஹெம் பண்றது எல்லாத்தையும் கத்துக்குவோம். நீங்க தயாரா?

**ஸ்டெப் 1 - டெம்ப்ளேட் மார்க்கிங், கட்டிங்**

உங்களுக்கு விருப்பமான துணிய தேர்ந்தெடுத்து வீடியோல காட்டியிருக்கற மாதிரி பாதி நீளத்துக்கு மடிச்சிக்கங்க. இப்போ www.ushasew.comலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட பின் டெம்ப்ளேட்ட துணி மேல வெச்சு சரியான எடத்தில மணிகோர்த்த பின்களால பின் பண்ணனும். மடிப்புல உள்ள டெம்ப்ளேட்டின் பக்கங்கள் துணியோட மடிப்புல இருக்கறதை உறுதி செய்துக்கங்க. அடுத்து, ஒரு சாக் துண்டை எடுத்துகிட்டு பின்பண்ண துணில ட்ரேஸ் பண்ணனும். அது முடிஞ்சதும், ஒரு கத்திரிக்கோல எடுத்துகிட்டு, கவனமா ட்ரேஸ் பேட்டன்ல கட் பண்ணனும். ஒரு பக்கமா ஒதுக்கி வெச்சிருங்க.

இப்போ மீதியுள்ள துணிய எடுத்து மற்ற பகுதிகளை வெட்டுவோம். துணியின் 1/4அ மடிச்சு டெம்ப்ளேட் டில்டட் யோக்கை அது மேல வீடியோல காட்டியிருக்க மாதிரி வையுங்க. தொடர்ந்து டெம்ப்ளேட்ட இடத்தில வெச்சு ட்ரேஸ் பண்ணுங்க. டெம்ப்ளேட்லேந்து பின்னை எடுத்துருங்க கட் பண்ணும்போது துணி ஸ்திரமா இருக்க கட் பண்றதுக்கு முன்னால மறுபடியும் ட்ரேஸ் பண்ணின லைன்லயே பின் பண்ணுங்க.வீடியோல காட்டியிருக்கற மாதிரி துணிய மடிச்சு அதுக்கு மேல யோக் டெம்ப்ளேட்ட மறுபடியும் வையுங்க. இன்னொரு யோக்குக்கும் அதே செயல்பாட்டை திரும்பச் செய்யுங்க. இப்ப உங்களிடம் ரெண்டு துண்டுகள் யோக் இருக்கும்.

















அடுத்து டெம்ப்ளேட்ட மீதியிருக்கற துணிக்கு மேல வைக்கணும். மடிஞ்சிருக்கற பக்கம் துணியின் மடிச்ச பிரிக்கு வரணுங்கறதை உறுதிசெய்துக்கங்க. அப்புறம் டெம்ப்ளேட்ட பின் பண்ணி ட்ரேஸ் பண்ணுங்க. கூடுதல் கவனம் செலுத்துங்க ஏன்னா டெம்ப்ளேட்ல சுட்டி காட்டி இருக்கற மாதிரி ஒரு நோட்சை உருவாக்கணும். இது முடிஞ்சதும், கத்திரிக்கோலை எடுத்துகிட்டு, மார்க்கிங் மேல கட் பண்ணிட்டே வாங்க.

கடைசியா நாம ரெண்டு ஸ்லீவ் துண்டுகளை கட் பண்ணுவோம். பின் பண்றது, ட்ரேஸ் பண்றது, பின் எடுக்கறது அப்புறம் கடைசில துணிய கட் பண்ற செயல்பாடுகளை மறுபடியும் செய்யுங்க.

## ஸ்டெப் 2 கேதர்களை உருவாக்கறது மூலம் முன்பக்க பீஸ்களை தயார் செய்து முன்பக்க துணில யோக்-களை இணைக்கணும்.

முன் துண்டுல மார்க்கிங் இருக்கறதை ஞாபகம் வெச்சிக்கங்க, கத்திரிக்கோலால மார்க்கிங்க நோட்ச் செய்துகிடடு, பாயின்ட் செய்யப்பட்ட பிரிவுல கேதர்களை உருவாக்கத் தொடங்குங்க. உஷா ஜானோம் வொண்டர் ஸ்டிட்ச் தையல் மெஷின்ல கேதரிங் ஃபூட்ட எடுத்துட்டு உஷா ஜானோம் கேதரிங் ஃபூட்டை பொருத்துங்க. த்ரெட் டென்ஷல் டயலை அதிகபட்சமா அதாவது இதுக்கு 9ல செட் பண்ணுங்க, அப்றம் தையல் நீளம் 3.5க்கு செட் பண்ணிகிட்டு தைக்கத் தொடங்குங்க. அதிகப்படியா உள்ள நூல் இருந்துச்சுன்னா கட் பண்ணிருங்க. நீங்க முடிச்சிருக்கற கேதர்கள் பாக்க இப்படித்தான் இருக்கணும். இப்போ, யோக்-ன் ரெண்டு துண்டுகளை எடுத்து, அவற்றை பாதியா மடிச்சு இதுல காட்டியிருக்கற மாதிரி நடுவுல ஒரு நோட்ச் உருவாக்குங்க, இது துண்டுகளை மாட்ச் பண்ண உதவும். இது முடிஞ்சதும், ஒரு யோக் துண்டை எடுத்துகிட்டு நடு நோட்ச்களோட அதை மாட்ச் பண்ணிகிட்டு அதை முன்பக்க துண்டு மேல வீடியோல காட்டி இருக்க மாதிரி சரியான பக்கம் சரியான பக்கத்தை நோக்கி இருக்கற மாதிரி வையுங்க அப்றம் மற்ற துண்டுகளை எடுத்துட்டு, மைய நோட்ச்களை மாட்ச் பண்ணி யோக்-ன் சரியான பக்கம் பின்பக்கத்தை பாத்துட்டு இருக்கற மாதிரி துணியின் அடிப்பகுதியில வையுங்க. சரியான எடத்தில இந்த எல்லா துண்டுகளையும் வீடியோல காட்டியிருக்கற அதே மாதிரி வையுங்க.

இது நம்மை பரிச்சயம் செய்துக்க, யோக்-ன் பாயின்ட் செய்யப்பட்ட பிரிவுதான் தோள்பட்டை பகுதி, இதுதான் கையின் துளை பகுதி. தோள்பட்டைகளையும் ரெண்டு கை ஓட்டைகளையும் மாட்ச் பண்ணி அவற்றை பின் பண்ணனும். மீதி உள்ள எல்லா பகுதிகளையும் பின் பண்ணுங்க இது கொஞ்சம் சிக்கலான விஷயம், அதனால நெருக்கமா கவனம் செலுத்தணும். அவற்றை நீங்க பின் பண்ணின பிறகு, உங்க பின்பக்க துண்டு பாக்க இப்படி இருக்கணும். இதுதான் யோக்னு குறிப்பிடப்படுது. மறுபடியும் மிஷினுக்குப் போய் இவற்றை ஒன்ணா வெச்சு தைக்கலாம். நாம ஏற்கெனவே A ஃபூட்டுக்கு பதிலா கேதரிங் ஃபூட்-ஐ மாத்தி வெச்சிருக்கோம். இப்ப பிரஸ்ஸர் ஃபூட்-ன் முனையோட வட்ட யோக்-ஐ அலைன் பண்ணிட்டு தைக்கத் தொடங்குங்க, தெச்சிட்டே போகறப்ப மணி கோர்த்த பின்களை நீக்கிட்டே வாங்க. நீங்க தைச்ச முடிச்சது பாக்க இப்ப இருக்கணும்.

## ஸ்டெப் 3 முன், பின் பக்க துண்டுகளை இணைத்தல்







இப்ப நாம பின் துண்டை எடுத்து முன் துண்டுக்கு மேல விரிச்சு, தோள்பட்டைகளை சரியான பக்கம் சரியான பக்கத்தை நோக்கி இருக்கற மாதிரி மாட்ச் பண்ணனும். சரியான எடத்தில அவற்றை பின்பண்ணி அவற்றை ஒன்றா சேர்த்து தைக்கத் தொடங்குங்க., உங்க தையலை பாதுகாக்க ஆரம்பத்திலயும் முடிவுலயும் ரிவர்ஸ் ஸ்ட்ரிச் பண்ண மறந்துராதீங்க. அதிகப்படியான எல்லா நூலை கட் பண்ணிருங்க. இன்னொரு தோள்பட்டைலயும் இதே செயல்பாட்டை திரும்பச் செய்யுங்க.

## ஸ்டெப் 4 நெக்லைனை முடித்தல்








அடுத்து நெக்லைன் வேலையப் பாக்கலாம். அதே துணிலேந்து ஒரு அங்குல பயாஸ் ஸ்ட்ரிப்ப கட் பண்ணுங்க. உங்களுக்கு பிடிச்ச துணிலேந்து ஒரு பயாஸ் ஸ்ட்ரிப்ப எப்படி கட் பண்றதுன்னு கத்துக்க www.ushasew.com.ல டென்ட் டிரஸ் வீடியோவ பாருங்க. நேரத்தை மிச்சப் படுத்த நாங்க ஏற்கெனவே ஒன்றை கட் பண்ணி வெச்சிருக்கோம். அதை பாதியா மடிச்சு துணியின் சரியான பக்கத்தில உள்ள நெக்லைனோட இதை மாட்ச் பண்ணுங்க. ஸ்ட்ரிப்போட திறந்த முனை நீங்க தைக்கப் போற எடத்துக்கு டாப்ல இருக்கணும். முழுசா தைச்சிட்டு அதிகப்படியா துணி இருந்தா கட் பண்ணிருங்க. நீங்க தைச்சு முடிச்சதும் பாக்க அது இப்படி இருக்கணும். ஆரம்பத்தில உள்ள பயாஸ் ஸ்ட்ரிப்ப மடிச்சு நேர்த்தியான லுக் குடுக்க விளிம்புல ஓவர்லாப் செய்யுங்க. அழகான ஃபினிஷிங் குடுக்க ஒரு எட்ஜ் தையல் போடுங்க. அது முடிஞ்சதும், இதுல காட்டியிருக்கற மாதிரி நெக்லைன்ல ஸ்லாஷ்கள் உருவாக்கத் தொடங்குங்க, இது வட்டத்தை தட்டையாக்கும் அப்றம் கழுத்தை சுற்றி இது சரியானபடி செட்டில் ஆகறதை உறுதிசெய்யும். இந்த கட்டத்தை முடிச்ச பிறகு, பயாஸ் ஸ்ட்ரிப்ப வீடியோல காட்டி இருக்கற மாதிரி மடிச்சு மடிப்புக்கு மேல தையுங்க. நெக்லைன் முடியற வரை தைச்சிட்டே போங்க, அதிகப்படியான நூலை கட் பண்ணிருங்க. அருமையான வேலை! நம்ப நெக்லைன் முடிஞ்சிருச்சு இப்ப ஸ்லீவுக்கு போகலாம்.

## ஸ்டெப் 5 ஸ்லீவ்களை இணைத்தல்





ஸ்லீவ்களை எடுத்துட்ட பாதிய மடிச்சு மத்தில ஒரு நோட்ச் குடுங்க. ஸ்லீவ்கள், டிரஸ் முன்பக்கம் அப்பறம் பின்பக்கம் மாட்ச் ஆகறதை உறுதி செய்துக்கங்க. இந்த மைய நோட்களை தோள்பட்டை இணைப்புகளோட பொருத்துங்க. இதைச் செய்ய, வீடியோல காட்டி இருக்கற மாதிரி ஸ்லீவ சரியான எடத்தில பின் பண்ணுங்க. ரெண்டு ஸ்லீவ்களுக்கும் இதைச் செய்யுங்க. துணிய பின் பண்ணும்போது கவனமா இருங்க. தயாராகிட்டீங்களா? தைக்கத் தொடங்கலாம்.

பிரஸ்ஸர் ஃபூட்-ன் முனையோட பின்பண்ணின பக்கத்தை அலைன் பண்ணி தைக்கத் தொடங்குங்க. தெச்சிட்டு போகறப்ப பின்களை நீக்க மறந்துராதீங்க.

இன்னொரு பக்கத்திலயும் இதே செயல்பாட்ட திரும்பச் செய்யணும். முடிஞ்சப்பறம், ஸ்லீவ் இணைப்புல தேய்மானத்தைத் தடுக்க நாம ஒரு ஜிக் ஜாக் தையல் போடுவோம்.





பேட்டர் செலக்டர் டயலை Cலயும் தையல் நீளத்தை 1.5லயும் செட் பண்ணிட்டு தைக்கத் தொடங்குங்க. ஜிக் ஜாக் தையல்ல ரிவர்ஸ் தையல் போடத் தேவை இல்லைங்கறதை நினைவுல வெச்சிக்கங்க. இதையே ரெண்டு பக்கங்கள்லயும் செய்யலாம். இது ரெட்டை வேலை மாதிரி தோணலாம் ஆனா இது ஒர்த்துதான்னு நாங்க உறுதி அளிக்கறோம். நாம தைச்சு முடிச்ச பிறகு அது பாக்க இப்படித்தான் இருக்கும். இது ஒர்த்தானே?

## ஸ்டெப் 5 பக்க சீம் அப்றம் ஹெம்லைனை முடித்தல்





நாம செய்ய வேண்டிய வேலைகள்ல அடுத்து வர்றது, சைட் சீம். வீடியோல காட்டி இருக்கற மாதிரி துணிய பாதியா மடிக்கணும் அது பாக்க ஒரு டிரஸ் மாதிரி இருக்கும், ரெண்டு பக்கங்கள்லயும் பாயின்ட் பண்ண பகுதிய தைச்சி அப்றம் ஸ்லீவ்களையும், டிரஸ்-ன் அடிப்பாகத்தையும் ஹெம் பண்ணுவோம். வாங்க தொடங்கலாம்.

சைட் சீம் பகுதிய, அலைன் பண்ணுங்க, ஸ்லீவ முதல்ல பிரஸ்ஸர் ஃபூட்டோட, ஆனா அதுக்கு முன்னால நேர் தையலுக்கு பேட்டன் செலக்டார் டயலை ஏ-க்கும் தையல் நீளத்தை 2.5க்கும் செட் பண்ணிக்கங்க. தைக்கத் தொடங்கி கீழ்நோக்கி போங்க. இதை மெதுவா, சீரா தைக்கணும். முடியற எடத்தை அடைஞ்சதும், தையல் பிரியாம இருக்கற ரிவர்ஸ் தையல் போடறதை மறந்துராதீங்க. அப்றம் அடுத்தப் பக்கத்துக்குப் போய் இதே செயல்பாட்டை மறுபடியும் செய்யுங்க.



அது முடிஞ்சதும், அதிகப்படியான நூல்களை கட் பண்ணிட்டு ரெண்டு சைட் சீம்லயும் ஜிக் ஜாக் தையலை போடணும் இந்த வீடியோல நேரத்தை மிச்சப்படுத்த நாங்க ஏற்கெனவே இந்த ஸ்டெப்ப செய்திருக்கோம். டிரஸ்ஸ முடிக்க இது ரொம்ப முக்கியங்கறதால இதை மிஸ் பண்ணிராதீங்க.



இப்ப நாம ஸ்லீவ்களை ஹெம் பண்ணலாம். அதைச் செய்ய ஸ்லீவ ஒரு கால் அங்குலத்துக்கு ரெண்டு தடவை மடிச்சிகிட்டு அதுக்கு மேல ஒரு நேர் தையல் போடணும். ஸ்லீவ் முழுக்க தைக்கணும், அப்படி தைக்கறப்ப அட்ஜஸ்ட் பண்ணிட்டே போகணும். நூல் கட் பண்ளணிட்டு அதே செயல்பாட்டை அந்தப் பக்கத்துக்கு செய்யணும். உங்க இறுதி தையல் பாக்க இப்படி இருக்கணும்.

இது முடிஞ்சதும், டிரஸ்-ன் அடிப்பகுதிக்கு போகணும், ஸ்லீவ் பகுதி மாதிரியே ஒரு கால் அங்குலத்துக்கு ரெண்டு தடவை மடிச்சிகிட்டு முழுக்க தையல் போடுங்க. உங்க இறுதி தையல் பாக்க இப்படித்தான் இருக்கணும்.



ஒரு ரீகேப் பாக்கலாம், நாம சைட் சீம்களை தெச்சோம், ஸ்லீவ்களை, டிரஸ்-ன் அடிப்பகுதிய ஹெம் பண்ணினோம்/ இதோட, தையல் வேலை முடிஞ்சிது.